# கம்பளத்தின் மேல் பேதுரு அழைக்கப்பட்ட போது (11:1-18)

கடந்த காலங்களில், இங்கிலாந்து நாட்டின் கட்டிடங்களில் பெரும்பாலும் வரவேற்பறை மற்றும் முகப்பு அறைகளில் மட்டுமே கம்பளங்கள் விரித்து வைக்கப்பட்டிருக்கும். வீட்டின் எஜமானரால் அழைக்கப்படுவதென்பது (வழக்கமாக, ஒரு கடிந்து கொள்ளுதலுக்காக) “கம்பளத்தின் மேல் அழைக்கப் படுதல்” அல்லது “கம்பளப்படுத்தப்படுதல்” என்று இருந்தது. சமீபத்திய வருடங்களில், ஆங்கில இனத்தைச் சேர்ந்த சில சமூகங்களில், மக்களை ‘‘கம்பளத்தின்மேல்’’ அழைக்கும் கருத்தானது தழுவிக் கொள்ளப்பட்டது. அலுவலர்கள் ஒரு விசாரணையை நடத்தும்போது, ஒரு கம்பளத் துண்டானது மேஜையின் முன்னால் விரிக்கப்பட்டிருக்கும். கேள்வி கேட்கும்போது, விசாரணைக் குழுவினர் மேஜையைச் சுற்றிலும் அமர்ந்திருக்க, குற்றம் சாட்டப்பட்டவர் அவர்களுக்கு முன்பாக அக்கம்பளத்தின் மேல் நிற்க வேண்டும். உலகின் அநேக பாகங்களில், கம்பளத்தின் மேல் அழைக்கப்படுதல் என்பது “ஒருவர் தன்னைக் குறித்துக் கணக்கொப்புவிக்க அழைக்கப் படுவது” என்று அர்த்தமாகின்றது.

கம்பளத்தின் மேல் அழைக்கப்படுதல் என்பது ஒரு பொழுதும் இனிய அனுபவமாயிருப்பதில்லை, ஆனால், நம்மில் அநேகருக்கு இது ஒருசமயம் இல்லாவிட்டாலும் வேறு ஒரு சமயத்தில் பெரும்பாலும் நடைபெற்றிருக்கும். இக்கட்டு ரையில் நாம், அப்போஸ்தலராகிய பேதுருவும் கூட கம்பளத் தின் மேல் அழைக்கப்பட்டதை நாம் காணப் போகின்றோம்.

கொர்நேலியு மற்றும் அவரது வீட்டாரின் மனமாற்றத்தைப் பற்றி நாம் படிக்கையில், பேதுரு மற்றும் ஆறு யூத சாட்சிகளின் மறுப்புகளை தேவன் எவ்விதம் மேற்கொள்ள வேண்டியிருந்

தது என்பதைக் கண்டோம். புறஜாதியாரை சபைக்குள் ஏற்றுக்கொள்வது பற்றி இந்த மனிதர்களுக்குச் சந்தேகம் இருந்ததால், மற்ற யூதர்களும் நம்பிக்கையற்றவர்களாய் இருந்தது பற்றி நாம் வியப்படைவதில்லை. ஆகையால் பேதுரு எருசலேமுக்குத் திரும்பியபோது கேள்வி கேட்கப்படுவதற்கு அழைக்கப்பட்டார்.

கம்பளத்தின் மேல் அழைக்கப்படும்போது, நாம் எவ்விதம் பதில்செயல் செய்ய வேண்டும்? பேதுரு தம்மை விமர்சனம் செய்தவர்களுக்கு முன்பாக நின்றபோது எவ்விதம் பதில்செயல் செய்தார் மற்றும் அதன் விளைவுகள் என்ன என்பதைப் பார்ப்போம்.

## திகைப்பூட்டும் ஒரு பதில்செயல் (11:1-3)

"புறஜாதியாரும் தேவ வசனத்தை ஏற்றுக் கொண்டார்களென்று யூதேயாவிலிருக்கிற அப்போஸ்தலரும் சகோதரரும் கேள்விப்பட்டார்கள்" (11:1). பேதுரு செசரியாவில் இருந்த போது, அவருடைய செயல்பாடுகளைப் பற்றிய வதந்திகள் யூதேயா முழுவதிலும் பரவின. அவைகளில் சில விஷயங்கள் உண்மையாயிருந்தாலும், பல விஷயங்கள் பொய் என்பது சந்தேகத்திற்கிடமின்றி இருந்தது. (பந்தயக் குதிரைகளில் ஒன்றிற்கு அதன் உரிமையாளர் "கெட்ட செய்தி" என்று பெயர் வைத்திருந்தார். வழக்கமில்லாத அந்தப் பெயர் வைத்த காரணத்தைக் கேட்ட போது, அவர் புன்சிரிப்புடன், "கெட்ட செய்தி விரைவாகப் பயணிக்கிறது" என்று கூறினார்.)

பின்னாளில் பேதுரு எருசலேமுக்குத் திரும்பினார். "பேதுரு எருசலேமுக்குத் திரும்பி வந்தபோது, விருத்தசேதனமுள்ளவர்கள் அவனை நோக்கி: 'விருத்தசேதனமில்லாத மனுஷரிடத்தில் நீர் போய், அவர்களோடே போஜனம் பண்ணினீர்' என்று, அவனோடே வாக்குவாதம் பண்ணினார்கள்" (வ. 2, 3). "விருத்தசேதனமுள்ளவர்கள்" என்பது சாதாரணமாக "யூதர்கள்" என்றே அர்த்தப்படும், ஆனால் இவ்வசனப் பகுதியில் இது யூத கிறிஸ்தவர்களைக் குறிக்கின்றது. இது முதலாவது வசனத்தில் கூறப்பட்ட "யூதேயாவிலிருக்கிற அப்போஸ்தலரும், சகோதரரும்" என்பவர்களைக் குறிப்பிடக் கூடும், ஆனால்

*அநேகமாக இது, எருசலேமின் சபைக்குள்ளாகவே இருந்து கொண்டு, மோசேயின் பிரமாணத்தைக் கடைப் பிடிக்க உறுதி கொண்டவர்களைக் குறிப்பதாயிருக்கும். (இவர்கள் பின்னாளில் பிரச்சனைக்குக் காரணமாயிருந்த "பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளானவர்களாய்" இருக்கலாம் [15:5].) கம்பளத்தின் மேல் பேதுருவை அவர்கள் அழைத்த உண்மையானது, மற்ற அப்போஸ்தலர்களால் அவர்களை அமைதிப்படுத்த முடியவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது; அது அந்த அப்போஸ்தலர்கள் அவர்களிடத்தில் பரிவு காட்டியதையும் சுட்டிக்காட்டலாம். ("சபையின் சாதாரண உறுப்பினர்களால்" பேதுரு கணக்கொப்புவிக்கும்படி அழைக்கப்பட்டது, அவர் இன்றைய நாட்களில் சிலர் உரிமை கோருவது போல, "சபையின் வழுவா வரம் பெற்ற தலைவராக'' இருக்கவில்லை என்பதையும் கூட சுட்டிக்காட்டுகின்றது.)*

*''விருத்தசேதனமில்லாதவர்களிடத்தில் நீர் சென்று அவர்களை ஞானஸ்நானப்படுத்தினீர்''* என்று அல்ல, மாறாக *"விருத்தசேதனமில்லாதவர்களிடத்தில் நீர் சென்று அவர்களுடன் உணவு உண்டீர்" என்பதே பேதுருவுக்கு எதிராக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டாகும்.*[1] *ஐக்கியமாகுதல் பற்றிய விஷயங்களே புறஜாதியாரை சபையில் ஏற்றுக் கொள்ளுவதில் மாபெரும் தடைகளாயிருந்தன. இதைப் பற்றி விமர்சித்தவர்கள், புறஜாதியாரை ஞானஸ்நானப்படுத்துதல், மற்றும் அவர்களுடன் சேர்ந்து இருத்தல் ஆகியவற்றிற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை, ஆனால் ஆராதனையிலோ அல்லது ஐக்கிய விருந்திலோ புறஜாதியார் தங்களுடன் சேர்ந்து உண்ணும் கருத்தை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது! (பிரித்து வைக்கப்பட்ட சபைகள் என்ற கருத்தை அவர்கள் விரும்பியிருக்கக் கூடும்.)*

*ஆகையால், பேதுரு தமது செயல்களுக்காக விமர்சிக்கப்பட்ட விஷயத்துடன் நமது பாடம் தொடங்குகின்றது, ஆனால் இது நமது முக்கிய கவனமல்ல. விமர்சகர்கள் அல்லது விமர்சனங்கள் என்பவை புதியதல்ல. பேதுருவின் பதிலில் தான் இப்பாடம் கவனம் செலுத்துகின்றது.*

# பேதுரு எவைகளைச் செய்யவில்லை? (11:4-17)

பேதுருவின் பதிலில் இடம் பெறாத காரணிகளைக் குறிப்பதில் நாம் தொடங்குவோம். முதலாவது, பேதுரு தாம் கம்பளத்தின் மேல் அழைக்கப்பட்ட போது வியப்படைய வில்லை. உண்மையில், அவர் அதை எதிர்பார்த்திருந்தார். அவர் ஆறு யூதக் கிறிஸ்தவர்களைத் தம்முடன் செசரியாவுக்கு அழைத்துச் சென்றிருந்தார் (10:23, 45-47) மற்றும் அவர்களை யோப்பாவுக்குத் திரும்ப அனுப்புவதற்குப் பதிலாக, எருசலேமுக்குத் தம்முடன் அழைத்து வந்தார் (11:12). நீங்களோ அல்லது நானோ, அசாதாரணமான ஏதொன்றையும் முயற்சி செய்யும்போது, நாம் விமர்சிக்கப்பட்டால், அதைப் பற்றி நாம் ஆச்சரியப்படக் கூடாது. வரலாற்றில் மாபெரும் மனிதர்களில் ஒருவராகிய வின்ஸ்ட்டன் சர்ச்சில், அதிகமாய் விமர்சனம் பண்ணப்பட்டவராகவும் இருந்தார். அவர் விமர்சனத்தை, “உங்களிடமுள்ள குறையாத ஒரு சரக்கு” என்று அழைத்தார்.

இரண்டாவது, பேதுரு கம்பளத்தின் மேல் அழைக்கப்பட்ட போது, அவர் மனம் புண்படவில்லை. அவர் ‘‘எனக்கு அறைகூவல் விடுக்க என்ன தைரியம் உங்களுக்கு! நான் ஒரு அப்போஸ்தலன், உண்மையில் அப்போஸ்தலர்களில் முன்னோடியானவன்! இராஜ்யத்தின் திறவுகோல்களை இயேசு என்னிடத்திலே தான் கொடுத்தார் என்பதை மறந்து விட வேண்டாம்!” என்று கூறவில்லை. எவ்வளவு அதிக செல்வாக்குடையவரானாலும், எவரொருவரும் கூர்ந்து ஆராயப்படுவதிலிருந்து விலக்குப் பெறுவதில்லை.

மூன்றாவது, பேதுரு வேறு எந்த விஷயத்தையும் அவர் பதிலில் கூறவில்லை. வசனம் 3ல் உள்ள ‘‘வாக்குவாதம் பண்ணினார்கள்’’ என்ற சொற்றொடரானது பேதுருவை அவர்கள் நடத்தியதில் காணப்பட்ட கடுமையைச் சுட்டிக் காட்டுகின்றது. ‘‘அவர்கள் விமர்சித்தார்கள்’’ என்று NIV கூறுகின்றது; “அவரிடத்தில் குற்றம் காணத் தொடங்கினார்கள்” என்று Emphasized New Testament - இல் உள்ளது. பேதுரு, தம்மை விமர்சனம் செய்தவர்களிடத்தில் இருந்த குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அவர்களைத் திருப்பித் தாக்கியிருக்க முடியும் -

ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. அவ்விதமான எதிர் தாக்குதல், இயற்கையாய் இருந்தாலும் அது எந்த ஒரு காரியத்தையும் சாதிக்காது. தீமைக்கு நன்மை செய்யும்படி யாகவே வேதாகமம் நமக்கு அறைகூவல் விடுக்கின்றது (லூக். 6:27; ரோமர் 12:21).

பேதுருவின் அமைதியான மற்றும் ஒழுங்கமைவு பெற்ற பதிலானது தனி நபர்களைக் கிறிஸ்து எவ்விதம் மாற்ற முடியும் என்பதைக் காண்பிக்கின்றது. சுவிசேஷப் புத்தகங்களில் இருந்து, பேதுரு ஒரு உணர்வு மிக்கவர் என்றும், தமது மனதில் உள்ளதை விரைவாகப் பேசுபவர் என்றும் நாம் அறிகின்றோம். அப். 11ல் அவர் தாக்கப்பட்டதுபோல அதற்கு முந்திய காலத்தில் தாக்கப்பட்டிருந்தால், அவர் பெற்றதைத் திருப்பிக் கொடுத்திருப்பார் (பதிலுக்குத் தாக்கியிருப்பார்) - எருசலேமின் சபையும் சிதறியிருந்திருக்கும். பேதுரு முதிர்ச்சியடையக் கர்த்தர் உதவிக் கொண்டிருந்தார்.

## பேதுரு எவைகளைச் செய்தார் (11:4-17)

பேதுரு கம்பளத்தின் மேல் அழைக்கப்பட்டபோது எவைகளைச் *செய்தார்?* அவர் தவறாக நடத்தப்பட்டதால் தமது நண்பர்களிடம் ஓடுவதற்குப் பதிலாக, தம்மைக் குற்றம் சாட்டியவர்களை எதிர்கொண்டு நின்றார். அவர் “கம்பளத்தின் மேல் உறுதியாக நின்று’’ தன்னை விமர்சித்தவர்களின் கண்களை உற்று நோக்கினார். ‘‘உங்கள் பேரில் உங்கள் சகோதரனுக்குக் குறைவுண்டு” என்று நீங்கள் எண்ணினால், நீங்களே *முதலாவது* அவரிடத்தில் செல்ல வேண்டும் என்று இயேசு போதித்தார் (மத். 5:23, 24). பேதுரு இதைச் செய்தார் - நீங்களும் நானும் இதையே செய்ய வேண்டும்.

இரண்டாவது, அளவு மீறிய செயல்பாட்டிற்குப் பதில், அவர் அமைதியாக இருந்தார். மிகை உணர்ச்சி நோயானது மிகை உணர்ச்சி நோயையே பெற்றெடுக்கின்றது. நீங்கள் விமர்சிக்கப்படும்போது அளவுக்கு அதிகமாக உணர்வுக் கொதிப்படைந்தால், உங்களை விமர்சித்தவர்களிடத்தில் பேசு வதற்கு முன்பு உங்களை அமைதிப்படுத்தச் சற்று அவகாசம் எடுத்துக் கொள்ளுங்கள்.

மூன்றாவது, பேதுரு தமது எண்ணங்களை ஒழுங்கு படுத்தி, உண்மைகளை முன்னிலைப் படுத்தினார்: "அதற்குப் பேதுரு காரியத்தை முதலிலிருந்து வரிசையாய் அவர்களுக்கு விவரிக்கத் தொடங்கி:" (வ. 4). வதந்திகள் என்ற சூடான தீயை குளிர்ந்த உண்மைகள் அணைத்து விடும்.

பேதுரு தமக்குக் கிடைத்த தரிசனத்தைப் பற்றி முதலில் கூறி விளக்கினார்:

> நான் யோப்பா பட்டணத்தில் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தபோது ஞானதிருஷ்டியடைந்து, ஒரு தரிசனத்தைக் கண்டேன்; அதென்னவென்றால், நாலு முனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒரு கூடு வானத்திலிருந்து என்னிடத்தில் இறங்கி வந்தது. அதிலே நான் உற்றுப்பார்த்துக் கவனிக்கிறபோது, பூமியிலுள்ள நாலுகால் ஜீவன்களையும், காட்டுமிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், ஆகாயத்துப் பறவைகளையும் கண்டேன் (வ. 5, 6).

பேதுரு தாம் பெற்ற தரிசனத்தை விளக்குகையில், தம்மைப் பற்றிய விமர்சனத்திற்கான பதிலில் தமது ஞானத்தை வெளிப்படுத்தினார்: தம்மிடத்தில் குற்றம் கண்டு பிடித்தவர்களின் எண்ணத்தைத் தாம் புரிந்து கொண்டதாகக் காண்பித்தார். "அல்லாமலும்: 'பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி' என்று என்னுடனே சொல்லுகிற சத்தத்தையும் கேட்டேன். அதற்கு நான்: 'ஆண்டவரே, அப்படியல்ல, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றும் ஒருக்காலும் என் வாய்க்குள்ளே போனதில்லை' " என்றேன் (வ. 7, 8). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், பேதுரு, "நான் செய்துள்ளது இதனால் உங்களுக்கு அசௌகரியமாயிருக்கிறது என்று எனக்குப் புரிகின்றது. சில நாட்களுக்கு முன்பு வரை நானும் கூட இதே உணர்வுள்ளவனாகவே இருந்தேன்!" என்றார். விமர்சனத்திற்குப் பதில் கூறுகையில், உங்களை விமர்சிப்பவரின் பக்கம் இருக்கும் விஷயங்களைச் சிறந்த முறையில் உணர்ந்து, அவர் ஏன் அவ்விதம் செயல்படுகின்றார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

பேதுரு தாம் பெற்ற தரிசனத்தைப் பற்றித் தொடர்ந்து கூறினார்: "இரண்டாந்தரமும் வானத்திலிருந்து சத்தம் உண்டாகி, 'தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே' யென்று மறுமொழி சொல்லிற்று. இப்படி மூன்று

தரம் சம்பவித்த பின்பு, எல்லாம் வானத்திற்குத் திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டது'' (வ. 9, 10). "தேவன்'' என்ற வார்த்தையை உங்கள் மனதில் அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள். இவ்விடத்தில் பேதுரு தாம் பேசியதில் பத்து அல்லது அதற்கதிகமான தடவைகள் தேவனைக் குறிப் பிட்டார். தாம் விரும்பியதையல்ல, ஆனால் தேவன் தம்மிடத்தில் கூறியதையே தாம் செய்தார் என்பதே பேதுருவின் தற்காப்பு வாதத்தின் மையமாகும். பேதுருவுக்குத் தரப்பட்டது போன்ற தரிசனமெதுவும் நமக்குத் தரப்படாது, ஆனால் தேவனுடைய சித்தத்தை நமக்குக் கூறும் வேத வசனங்களை நாம் பெற்றுள்ளோம். நமது செயல்களில் எதுவும் விமர்சனம் பண்ணப்படுமேயானால், நமது செயல்களுக்கான, ''புத்தகம், அதிகாரம் மற்றும் வசனம்'' ஆகியவற்றைப் பெற்றிருப்பது ஞானமுள்ளதாகும்.

பேதுரு தொடர்ந்து பேசுகையில், தேவனுடைய அருளிரக்கமுள்ள வழிகாட்டுதலை வலியுறுத்தினார்: "உடனே செசரியாவிலிருந்து என்னிடத்திற்கு அனுப்பப்பட்ட மூன்று மனுஷர் நான் இருந்த வீட்டுக்கு முன்னே வந்து நின்றார்கள். நான் ஒன்றுக்கும் சந்தேகப்படாமல் அவர்களோடே கூடப் போகும்படி ஆவியானவர் எனக்குக் கட்டளையிட்டார்'' (வ. 11, 12அ). சரியான நேரத்தில் செயல்படும் தேவனுடைய பண்பினால் பேதுரு ஈர்க்கப்பட்டார்.

பிறகு, பேதுரு தாம் கூறிய யாவையும் உண்மையே என்பதற்கு ஆதாரம் அளித்தார். குறிப்பாக, தாம் உடன் அழைத்துச் சென்ற ஆறு பேராகிய யூத சாட்சிகளைக் குறிப்பிட்டார், "சகோதரராகிய இந்த [அநேகமாக அங்கு நின்றிருந்த அவர்களைச் சுட்டிக் காட்டியிருப்பார்] ஆறு பேரும் என்னோடே கூட வந்தார்கள்" (வ. 12ஆ). பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டுமே சாட்சியங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன (உபா. 17:6; மத். 18:16). பேதுரு ஏவப்பட்ட ஒரு அப்போஸ்தலராயிருந்தாலும், அவர் கூறினார் என்பதற்காக மட்டுமே மற்றவர்கள் தமது கூற்றை நம்ப வேண்டும் என்று அவர் எதிர்பார்த்ததில்லை. சில வேளைகளில், கம்பளத்தின் மேல் நாம் அழைக்கப்படுகையில், நம் முகத்திற்கெதிரே சொல்லும் வார்த்தைகளை மக்கள் நம்பாதபோது நமது மனம் புண்படுகின்றது. ஆதி சபையில் நன்கு அறியப்பட்ட

முன்னோடி ஒருவருக்கே இணைந்து செயல்படும் சாட்சியங்கள் தேவையாயிருந்தது என்றால், நமக்கும் அது தேவை என்பதில் நாம் ஏன் ஆச்சரியப்பட வேண்டும்?

தமது வரலாற்றை உறுதிப்படுத்துவதற்கு ஆறு சாட்சிகளை நிலைநாட்டிய பேதுரு தமது வாதத்தின் கருத்துக்கு வந்தார்:

> ... அந்த மனுஷனுடைய வீட்டுக்குள் பிரவேசித்தோம்.[2] அவனோ தன் வீட்டிலே ஒரு தேவ தூதன் நிற்கிறதைக் கண்டதாகவும், யோப்பா பட்டணத்திலிருக்கிற பேதுரு என்ற மறுபேர்கொண்ட சீமோனை அழைக்கும்படிக்கு மனுஷரை அவ்விடத்திற்கு அனுப்பு; நீயும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுவதற்கேதுவான வார்த்தைகளை அவன் உனக்குச் சொல்லுவான் என்று அந்தத் தூதன் தனக்குச் சொன்னதாகவும் எங்களுக்கு அறிவித்தான் (வ. 12இ-14).

பேதுரு மட்டுமின்றி, அவர் யாருக்காக அனுப்பப்பட்டாரோ, அந்தப் புறஜாதியாரும் ஊக்குவிக்கப்பட்டிருந்தனர்.

நிறைவாக,செசரியாவில் அந்தப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த நாளின் உச்சகட்டத்தைப் பற்றிப் பேதுரு விளக்கிக் கூறினார்: ''நான் பேசத் தொடங்கின போது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே[3] நம்மேல்[4] இறங்கினது போலவே, அவர்கள் மேலும் இறங்கினார். 'யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான், நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்' என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவு கூர்ந்தேன்'' (வ. 15, 16; இ.வ. 1:4). பேதுருவின் கூற்றைக் கேட்டவர்கள் திகைப்படைந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் அந்த ஆறு சாட்சிகளின் பக்கம் திரும்பி, ''உண்மையிலேயே இது நடந்ததா? பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டது போல புறஜாதியாரும் பெற்றுக் கொள்ள முடிந்ததா?'' என்று கேட்டதை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது. அந்த ஆறு மனிதர்களும் தலையசைப்பதையும் நான் காண முடிகின்றது; பேதுரு கூறியபடியாகவே அது நடந்தேறியது.

பேதுரு, வரிசைக்கிரமமான தமது விவரிப்பை முடிக்கத் தயாரானார்: ''ஆதலால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நமக்குத் தேவன் வரத்தை அநுகிரகம் பண்ணினது போல அவர்களுக்கும் அந்த வரத்தையே

அநுகிரகம் பண்ணியிருக்கும்போது, தேவனைத் தடுக்கிறதற்கு நான் எம்மாத்திரம் என்றான்" (வ. 17). பேதுரு இவ்விடத்தில், "நீங்கள் அப்போது என் இடத்தில் இருந்திருந்தால், தேவனுடைய வழியில் நீங்கள் குறுக்காக நின்றிருப்பீர்களா?" என்றே மறைமுகமாய்க் கேட்டார். கம்பளத்தின் மேல் நீங்கள் அழைக்கப்படும் போது, உங்களை விமர்சிப்பவர்களின் நிலையில் உங்களை வைத்துப் பார்ப்பதும், அத்துடன் உங்களை விமர்சிப்பவர்களை உங்கள் நிலையிலிருந்து பார்க்கும்படி கேட்பதும் ஆகிய இரண்டுமே ஞானமுள்ள செயலாகும்.

பேதுரு கணக்கொப்புவிக்கும்படி அழைக்கப்பட்டபோது, கூறிய பதிலுரையைப் படிக்க நேரம் ஒதுக்குங்கள். அப்பொழுது, யாரேனும் சிலர் அடுத்து உங்களை விமர்சிக்கும் போது நீங்கள் இன்னும் சிறந்த முறையில் தயாராக இருக்க முடியும்.

## திருப்திகரமான ஒரு விளைவு (11:18)

வசனம் 18ல் விளக்கப்பட்டுள்ளதைக் காட்டிலும் அதிகமாய்த் திருப்தியளிக்கும் ஒரு முடிவைக் கற்பனை செய்வது மிகவும் கடினமாகும். அவ்வசனம், "இவைகளை அவர்கள் கேட்ட பொழுது ..." என்று தொடங்குகின்றது. பேதுருவை விமர்சித்தவர்கள் கேட்பதற்கு விருப்பத்துடனிருந்தனர். ஒத்துப் போகாமையைச் சரி செய்யும் திறவுகோல் செய்தித் தொடர்பாகும், கேட்பதற்கு இயற்கையாய் உள்ள விருப்பமே செய்தித் தொடர்பின் திறவுகோல் ஆகும்.

அந்த வசனத்தில் அடுத்து, "அமர்ந்திருந்து" (வ. 18ஆ) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பேதுருவுடன் நடந்த அந்த நேருக்கு நேரான வாதமானது அதிக ஓசையுள்ளதாயிருந்திருக்க வேண்டும். குற்றங்கள் சாட்டப்பட்டன, சந்தேகமேயின்றி, மனநிலைகள் கொழுந்து விட்டு எரிந்திருக்கும், மற்றும் குரல்கள் உயர்ந்திருக்கும் - ஆனால் பேதுருவின் அமைதியான பதிலானது கூட்டத்தை அமைதிப்படுத்தியது. இது, "மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்" (நீதி. 15:1) என்பதை விளக்கப்படுத்துகின்றது.

ஆயினும், பேதுருவை விமர்சித்தவர்கள் அமைதிப்படுத்தப்

பட்டார்கள் என்பதல்ல, ஆனால் அவர்கள் ‘‘தேவனை மகிமைப்படுத்தினார்கள்’’ (வ. 18ஈ) என்பதே அவர்களது பதிலில் இருந்த அதிகம் திருப்தியளிக்கும் பகுதியாகும். நடந்த எல்லாவற்றிலும் தேவனுடைய கரம் இருந்ததை அவர்கள் கண்டனர், மற்றும் தேவனுடைய வழியில் குறுக்கிடக் கூடாதென்பதையும் அவர்கள் உணர்ந்தார்கள். ஆகையால், அவர்கள் “அப்படியானால், ஜீவனுக்கேதுவான மனந்திரும்பு தலைத்[5] தேவன் புறஜாதியாருக்கும் அருளிச் செய்தார்’’ (வ. 18இ) என்று முடிவு செய்தார்கள். யூதர்கள் மற்றும் புறஜாதி யார்களுக்கிடையில் இருந்த தடைகளை நீக்குவதற்கு மற்றமொரு மாபெரும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## முடிவுரை

அடுத்த முறை நீங்கள் கம்பளத்தின் மேல் அழைக்கப்படும் போது, அப். 11ல் பேதுருவுக்கு இவ்விளைவுகள் திருப்திகரமாய் இருந்தது போலவே உங்களுக்கும் அமையும் என்று நான் நம்புகின்றேன். அப்படியாகலாம் அல்லது ஆகாமலும் போக லாம். நீங்கள் விரும்பியபடி விளைவுகள் ஏற்படாமற் போனா லும், (1) பேதுருவைப் போன்ற பதில்செயலை நீங்களும் செய்து, (2) அனுபவத்திலிருந்து அதிகம் கற்றுக் கொள்ள நீங்கள் சிறந்த வகையில் முயற்சி செய்தால், நடப்பவை எதுவாயிருப் பினும் அவைகளை உங்களால் நன்மையென்று உணர முடியும்.

நாம் கம்பளத்தின் மேல் அழைக்கப்படும்போது, கிறிஸ்தவர் கள் நடந்து கொள்ள வேண்டிய விதமாய் நடந்து கொள்ளத் தேவன் நமக்கு உதவுவாராக!

## காட்சி-உதவிக் குறிப்புகள்

“கம்பளத்தின் மேல் அழைக்கப்படுதல்” என்ற சொற்றொட ரின் துவக்கம் பற்றிய அறிமுகத்தை நீங்கள் பயன்படுத்தினால், ஒரு சிறிய கம்பளத் துண்டை காட்சி உதவிப் பொருளாகப் பயன்படுத்த நீங்கள் விரும்பக் கூடும். பேதுரு கம்பளத்தின் மேல் அழைக்கப்பட்ட போது எப்படி பதில் அளித்தார் என்பதையும் - நாம் எப்படி பதில் அளிக்க வேண்டும் என்பதை

*யும் வலியுறுத்துவதற்காக, அவ்வப்போது அந்தக் கம்பளத் துண்டின் மேல் நீங்கள் நிற்கலாம். (கம்பளம் விற்கும் கடையொன்றில் உங்களுக்கு மாதிரித் துண்டொன்று கிடைக்கும்.)*

## *பிரசங்கக் குறிப்புகள்*

*அப். நடபடிகள் புத்தகத்தில், சபையின் முன்னோடிகள் அநேக முறை சபைக்குள்ளாக இருந்த பிரச்சனைகளைக் கையாள வேண்டியிருந்தது (அப். 5; 6; 11; 15). "சபையின் பிரச்சனைகளைக் கையாளுவது எப்படி" என்ற பயனுள்ள பிரசங்கத் தொடரானது இக்கருத்துக்களைக் கொண்டு மேற்கொள்ளப்படலாம்.*

---

குறிப்புகள்

*[1]"அப். நட. 2" இதழில் 10:9-16, 23, 48 க்கான விளக்கவுரைகளைக் காணவும். [2]பேதுரு தமது தற்காப்பு வாதத்தில் கொர்நேலியுவின் தனிச் சிறப்பான பண்பைப் பற்றி, எதுவும் குறிப்பிடவில்லை என்பது கவனிக்கத் தக்கதாகும். பேதுருவின் விமர்சனர்கள், கொர்நேலியு நல்லவரா அல்லது கெட்டவரா என்பது பற்றிக் கவலைப்படவில்லை; அவர் (கொர்நேலியு) புறஜாதியாராயிருந்ததால் அவருடன் பேதுரு சென்று உணவு உண்டது தவறு என்றார்கள். [3]இது அப். 2ல் வரும் பெந்தெகொஸ்தே நாள் ஆகும். [4]"நம்மேல்" என்பது அப்போஸ்தலர்களைக் குறிக்கின்றது. [5]குறைந்தபட்சம் இரண்டு காரணங்களுக்காக, மனந்திரும்புதல் என்பது இவ்விடத்தில் தேவனுடைய வரம் என்று அழைக்கப்பட்டுள்ளது: (1) புறஜாதியார் மனந்திரும்புவதற்குத் தேவன் வாய்ப்பளித்திருந்தார், மற்றும் (2) மனந்திரும்புதலை ஏற்படுத்தும் விஷயத்தை (அதாவது சுவிசேஷத்தை) அவர் கொடுத்திருக்கின்றார்.*